**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் சனிக்கிழமை

**IA.No.2/2024 in OS.No.86/2022**

**TNTM 03000194/2022**

காதர் பாஷா ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பாமிதா
2. ஜபுருல்லா
3. ஷம்ஷாத்
4. ஷாக்கிரா
5. இம்ரான்
6. சார்பதிவாளர், கண்ணமங்கலம்
7. வட்டாட்சியர், ஆரணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
8. N.ராம்குமார் ... உத்தேச தரப்பினர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 14.10.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.சந்திரசேகரன்,M.A.,B.L., திரு.C.சண்முகம்,M.A.B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. K.R.ராஜன், M.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.பொன்முடி,B.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும். 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

8ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச தரப்பினர்/பிரதிவாதியாக சேர்க்க அனுமதிவேண்டி இம்மனு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் 151 சி.பி.சி–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். இந்த வழக்கானது வாதி மற்றும் 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கும்/பிரதிவாதிகளுக்கும் இடையே நடைபெறும் பாகப்பிரிவினை வழக்காகும். மேற்படி அசல் வழக்கானது கனம் கோர்ட்டில்

தற்போது பிரதிவாதிகள் தரப்பில் PW1ஐ குறுக்கு விசாரணைக்காக வாய்தாபோடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரரும் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியான ஜபுருல்லா என்பவர் அசல் வழக்கில் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 1வது அயிட்ட சொத்தினை இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள 8ம் உத்தேச தரப்பினர்/பிரதிவாதி N.ராம்குமாருக்கு தவறான ஜக்குபந்திகள் போட்டு இந்த பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதனை மறைத்து தாவா 1ம் அயிட்ட சொத்தினை கடந்த 08.01.2024 அன்று ஆவண எண்.46/2024 என்று இவ்வழக்கில் உள்ள 6ம் பிரதிவாதியால் ஓர் தப்பு கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த தப்பு கிரையத்தினைக்கொண்டு N.ராம்குமார் தாவா சொத்தில் நுழைய முயற்சிக்கிறார். மேலும் இந்த வழக்கில் உள்ள 7ம் பிரதிவாதியின் உதவியுடன் பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்சிக்கிறார். இந்த 2, 6, 7 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்களின் இந்த செயல் சட்டத்திற்கு முரணானதாகும். கோர்ட்டை அவமதிக்கும் செயலுமாகும். எனவே அசல் வழக்கில் N.ராம்குமாரினை 8ம் பிரதிவாதியாக சேர்த்து நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் உள்ளது. இவ்வாறு இல்லாவிடில் இந்த எதிர்மனுதாரர்களின் செயலினால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே மேற்படி அசல் வழக்கில் N.ராம்குமாரினை 8ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. ப்ரபோஸ்டு பார்ட்டி/8ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் இவ்வெதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்க கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு சங்கதிகள் முழுவதையும் இவ்வெதிர்மனுதாரர் மறுக்கிறார். இவ்வெதிர்மனுதாரர் மனுவில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர்த்து மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் மனுவில் அசல் வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதென்றும், வழக்கின் 2ம் பிரதிவாதி ஜப்ருல்லா என்பவர் இவ்வெதிர்மனுதாரருக்கு வழக்கு 1ம் அயிட்டச் சொத்தினை தப்பு கிரையம் செய்துவிட்டார் என்றும், அதன் முன்னிலைக்கு இவ்வெதிர்மனுதாரர் சொத்தில் உள்நுழைய பார்க்கிறார் என்றும், பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்சிக்கிறார் என்றும், எனவே இவ்வெதிர்மனுதாரரை வழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டுமென்றும் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் சரியல்ல. அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

3. உண்மையில், இவ்வெதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தானது ஜப்ருல்லா என்பவருக்கு பட்டா எண்.1423 முன்னிலைக்கு பாத்தியப்பட்டது. மேற்சொன்ன பட்டாவில் ஜப்ருல்லா பெயர் மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே அவருடைய தனிப்பட்டச் சொத்து ஆகும். மேலும் மேற்சொன்ன சொத்து சம்பந்தமாக எந்த விதமான வில்லங்கமும் இல்லை என சார்பதிவு அலுவலகத்தில் தெரிந்து கொண்ட பின்னர்தான் இப்பிரதிவாதி மேற்சொன்ன சொத்தினை கிரையம் பெற்றார். மேலும்

இவ்வெதிர்மனுதாரருக்கு சொத்து சம்பந்தமாக வழக்கு உள்ளது என்ற விவரம் எதும் தெரியாது.

4. இவ்வெதிர்மனுதாரர் சரியான மற்றும் சட்டப்படியான ஆவணங்கள் முன்னிலைக்கு சொத்தினை சரியான பிரதிபலன் முன்னிலைக்கு கிரையம் பெற்றுள்ளார். மேலும் நீதிமன்றத்தில் சொத்து சம்பந்தமாக வழக்கு உள்ளது என சார்பதிவு அலுவலக ஆவணங்களில் ஏதும் வில்லங்கம் காணவில்லை. மேலும் சொத்து ஜப்ருல்லா என்பவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என வருவாய்துறை மற்றும் பதிவு அலுவலகங்கள் வாயிலாக அறிந்து கொண்டு அதன் பின்னர்தான் இவ்வெதிர்மனுதாரர் சரியான முறையில் கிரையம் பெற்றுள்ளார். எனவே இவ்வெதிர்மனுதாரர் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் ஆவார். மனுதாரர் தவறான முறையில் ஜப்ருல்லா என்பவரை பழிவாங்கும் நோக்கத்திற்காக இவ்வெதிர்மனுதாரரை நீதிமன்றத்திற்கு இழுத்தடித்து அலைகழிக்கும் எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனு ஏற்கக் கூடியதல்ல. மேலும் கனம் கோர்ட்டார் அவர்கள் மனுதாரருக்கு பாகம் உள்ளதென முடிவு செய்யும்பட்சத்தில், இவ்வெதிர்மனுதாரரின் பாகத்தை ஈக்விட்டி முன்னிலைக்கு இவ்வெதிர்மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை இவ்வெதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

6 மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை.

7. <u>**பிரச்சனைக்கான தீர்வு:–**</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை. அசல் வழக்கானது வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா 1வது அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதி இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 8ம் எதிர்மனுதாரருக்கு 08.01.2024ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார். தாவா சொத்துக்களை முழுமையாக தீர்வு காண்பதற்கு 8ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச தரப்பினர் /பிரதிவாதியாக சேர்க்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், இந்த எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்து ஜபுருல்லா பெயரில் பட்டா எண்.1423 ஏற்பட்டுள்ளது. அது அவருடைய தனிப்பட்ட சொத்தாகும். அந்த சொத்தில் வில்லங்கம் இல்லை என தெரிந்துக்கொண்ட பின்னர்தான் இந்த எதிர்மனுதாரர் கிரையம் வாங்கியுள்ளார். இந்த எதிர்மனுதாரர் உரிய முறையில் சரியான பிரதிபலனுக்கு கிரையம் வாங்கியுள்ளார். இந்த

எதிர்மனுதாரரை அலைகழிக்கும் எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கானது பாகபிரிவினை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி ஜபுருல்லாவிடமிருந்து இந்த எதிர்மனுதாரர் ராம்குமார் என்பவர் கிரையம் வாங்கியதை தனது எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ளார். தாவா 1வது அயிட்ட சொத்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள 8ம் எதிர்மனுதாரரால் கிரையம் பெறப்பட்டுள்ளதால், அசல் வழக்கை முழுமையாக தீர்வு காண்பதற்கு இந்த எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து புதிய வழக்குகள் ஏற்படுவதை தவிர்க்க இந்த 8ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமாகும். எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:37:54 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-</u> இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:38:02 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.